Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, MAY 06, 2024

திங்கட்கிழமை மே 06, 2024 | ஒளி: 09 கதிர்: 245 | பக்கம்:06 | நகரப்பதிப்பு★ | FREE




13 முழுமையான அமுல்படுத்த சஜித் தயாராயின்

# மனோ தேவையில்லை எங்களிடம் கூறுங்கள்

## கோவிந்தன் கருணாகரம் கோரிக்கை

வா.கிருஸ்ணா

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தயாராக இருக்கின்றார் என்றார் அதனை மனோ கணேசன் ஊடாக சொல்லக்கூடாது, தமிழ்த் தேசியத்திற்கான தமிழ் மக்களது பிரதிநிதிகளாக இருப்பவர்களை அழைத்து அவர் கூற வேண்டும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




# சா/த பரீட்சை இன்று ஆரம்பம்

2023/ 2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சை இன்று திங்கட்கிழமை (06) ஆரம்பமாகவுள்ளது.

இந்த பரீட்சையில் 452,979 பரீட்சார்த்திகள் பரீட்சைக்குத் தோற்றவுள்ளதாகப் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# சிசுக்களை தத்துக்கொடுப்பது அதிகரிப்பு



பொருளாதாரச் சிக்கல்கள் காரணமாக, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளைத் தத்து கொடுப்பது அதிகரித்துள்ளது.

ஒரு வருடத்தில் சராசரியாக சுமார் 1700 குழந்தைகள் தத்தெடுப்பதற்காகப் பிறருக்கு வழங்கப்படுவதாகப் பதிவாளர் திணைக்களத்தின் சிரேஷ்ட பிரதிப் பதிவாளர் நாயகம் (சிவில் பதிவுகள்) லக்ஷிகா கணேபொல தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# சர்வதேச மாநாட்டில் இலங்கைக்கு பாராட்டு

மனிதாபிமான கண்ணிவெடி ஒழிப்பு தொடர்பான சர்வதேச மாநாட்டில் இலங்கையின் கண்ணிவெடி அகற்றும் செயற்பாடு பாராட்டப்பட்டுள்ளது.

இந்த மாநாடு சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் உள்ள சர்வதேச மாநாட்டு மையத்தில் (ICCG) ஏப்ரல் 29 முதல் மே 1 வரை நடைபெற்றது. இந்த மாநாட்டில் 130 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலுக்கான ஜெனீவா சர்வதேச மையம் (GICHD) மற்றும் ஐக்கிய நாடுகளின் கண்ணிவெடி நடவடிக்கைக்கான ஒருங்கிணைந்த ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

04 பிரதான இடைக்கால கலந்துரையாடல்களை உள்ளடக்கிய இந்த மாநாட்டில் இலங்கையின் தலைமையில் 01 கலந்துரையாடல் மாநாடு நடைபெற்றதும் விசேடமாகும்.

இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரும் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தின் பணிப்பாளருமான எஸ்.சத்யானந்த

தொடர்ச்சி P2

# சஜித் எதற்காக தூது விட வேண்டும்?

## கோவிந்தன் கருணாகரனிடம் மனோ கேள்வி



"மனோ மூலம் தூது விடாது எம்மிடம் நேரடியாக சஜித் கூற வேண்டும்" என தமிழீழ விடுதலை இயக்க நண்பர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி. கூறியிருப்பது ஆச்சரியம் அளிக்கிறது. தமிழ் பொது வேட்பாளர் நிறுத்தப்பட வேண்டும் என மும்முரமாக செயற்படும் உங்களுக்கு எதற்காக சஜித் தூது விட வேண்டும் என எனக்கு தெரியவில்லை.

பொது வேட்பாளர் தொடர்பில் உறுதியான முடிவை எடுங்கள்.

தொடர்ச்சி P2

# சோனார் கப்பல்களை வழங்க ஜப்பான் முடிவு

இலங்கை விஜயம் செய்திருந்த ஜப்பான் வெளிவிவகார அமைச்சர் கமிகாவா யொகொ வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியை சந்தித்து கலந்துரையாடினார்.

"ஜப்பானும் இலங்கையும் கடலால் சூழப்பட்ட இரு தீவு நாடுகள்' என்று அமைச்சர் கமிகாவா தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் வெளியாகின

2022 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தர பரீட்சையின் மீள் மதிப்பீட்டு பெறுபேறுகள் சனிக்கிழமை (04) இரவு வெளியிடப்பட்டுள்ளன.

மீள் மதிப்பீட்டுக்காக 49,312 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளதாகவும், 250,311 விடைத்தாள்கள் மீள் மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2


# ஹிஜாப் விவகாரம் தொடர்பில் சூரா சபையின் அறிவித்தல்

எம்.யூ.எம்.சனூன்

இலங்கை பரீட்சை திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, மாணவியர் தமது முகத்தையும் இரு காதுகளையும் பரீட்சையின் ஆரம்பத்திலிருந்து முடியும் வரை முழுமையாகத் திறந்திருக்க வேண்டும். இது 2019 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சுற்று நிருபமாகும். பொதுவாக பரீட்சாத்திகள் அனைவரும் எவ்வித பரீட்சை அத்துமீறல்களிலும் ஈடுபடக் கூடாது என்பது இஸ்லாமியச் சட்ட வரம்பாக இருப்பதுடன் நாட்டின் சட்டமாகவும் இருக்கிறது என்பதை எல்லோரும் கவனத்திற்குக் கொள்ளவேண்டும்.

தொடர்ச்சி P2

# மாரடைப்பு மரணங்கள் அதிகரிப்பு



பலாங்கொடை பிரதேசத்தில் கடந்த மூன்று மாதங்களுக்குள் இடம்பெற்ற திடீர் மரண பரிசோதனைகளில், 30 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட மரணங்களில் நூற்றுக்கு 70 சதவீதமானவை மாரடைப்பால் ஏற்பட்டவை என பலாங்கொடை திடீர் மரண பரிசோதகர் பத்மேந்திர விஜயதிலக்க தெரிவித்தார்.

இந்த தரவுகளின்படி, மாரடைப்பு காரணமாக இறக்கும் போக்கு, குறிப்பாக இளைஞர்கள் மற்றும் நடுத்தர வயதினரிடையே அதிகரித்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்துடன், இளைஞர்கள் மற்றும் 50 வயதுக்குட்பட்டவர்கள் மத்தியில் வயதான பின்னரே இரத்தப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது. அக்கருத்தை மாற்ற வேண்டும் எனவும் மரண விசாரணை அதிகாரி சுட்டிக்காட்டினார்.

மேலும், முப்பது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு திடீரென வயிற்று வலி, தலைசுற்றல், வலிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்பட்டால், இரத்தப் பரிசோதனை, ஈ.சி.ஜி. பரிசோதனை செய்ய வேண்டும் என்றார்.

30-50 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களும் நடுத்தர வயதினரும் மேற்கூறிய அவசரகால நிலைமைகளுடன் ஏற்படும் மாரடைப்புகளில் இருந்து தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதில் அக்கறை செலுத்த வேண்டுமென பத்மேந்திர விஜேதிலக்க மேலும் தெரிவித்தார்.

# விமல் அணியில் ஜனாதிபதி வேட்பாளர்



தன்னுடைய அரசியல் கட்சியில் இருந்தும் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரை களமிறக்க உள்ளதாக தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வீரவன்ச அறிவித்துள்ளார்.

# உப்பாறில் மண்டை ஓடும் எலும்புகளும் மீட்பு

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு- சத்திருக்கொண்டான் கண்ணகி அம்மன் ஆலயத்தின் பின்பகுதியிலுள்ள உப்பாற்றில் இனம் தெரியாத ஆண் ஒருவரின் மண்டை ஓடு மற்றும் எலும்புகள், சனிக்கிழமை (04) பிற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக கொக்குவில் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# தமிழ் பொது வேட்பாளரை களமிறக்குவதற்கான கலந்துரையாடல்

நாட்டில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு பொதுக் கட்டமைப்பொன்றை ஸ்தாபிப்பதற்கு அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்கள் இடையே இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கை தமிழரசுக் கட்சி ரீதியிலான உத்தியோகபூர்வமான முடிவினை அறிவிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் களமிறக்கப்படுவது தொடர்பில் அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களுக்கு இடையிலான கலந்துரையாடல் சனிக்கிழமை (04) யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது.

இதன்போது, அரசியல் கட்சிகளின்




பிரதிநிதிகளுக்கும் சிவில் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட வேண்டியதன் அவசியம் மற்றும் வவுனியாவில் சிவில் அமைப்புக்கள் ஒன்றுகூடி முடிவெடுத்த விடயங்கள் சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

தொடர்ச்சி P2

# யாழில் சட்டவிரோதமான கொலை களம் சுற்றிவளைப்பு

## மாடுகள், ஆடுகள் மீட்பு; இறைச்சியும் சிக்கின

கஜிந்தன்



யாழ்ப்பாணத்தில்- ஒஸ்மானியா கல்லூரிக்கு அருகாமையில் நீண்டகால காலமாக இயங்கி வந்த சட்டவிரோத மாடு வெட்டும் இடம் ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாண பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் நிஷாந்த தலைமையிலான பொலிஸ் குழுவினர் மற்றும் யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் இந்த சுற்றிவளைப்பினை மேற்கொண்டனர்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# மனோ...

அத்துடன், நாங்கள் ஒன்று பட வேண்டும் எதனைச் செய்கின்றோமோ யாராவது ஓர் உண்மையாக வாக்குறுதிகளைப் பெற்று பகிரங்கமாக வேண்டும் என்றால் ஒரு சர்வதேச நாட்டில் சாட்சியுடன் வாக்குறுதிகளைப் பெற்று வாக்களிப்பதா அல்லது பொது வேட்பாளரை நிறுத்துவதா? என்பதனை நாங்கள் ஒன்றாக முடிவெடுக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் அமரர் ஸ்ரீ சபாரத்தினம் அவர்களின் 38ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு மட்டக்களப்பில் சனிக்கிழமை (04) நடைபெற்றது.

மே மாதம் 06ஆம் திகதி தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் அமரர் சபாரத்தினம் சுட்டுக்கொல்லப்பட்டார். அவரது நினைவேந்தல் நிகழ்வினை வருடாந்தம் தமிழீழ விடுதலை இயக்கம் அனுஷ்டித்து வருகின்றது. இதன் கீழ் தலைவர் அமரர் ஸ்ரீ சபாரத்தினம் அவர்களின் நினைவேந்தல் மட்டக்களப்பில் உள்ள தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரம்,

சபாரத்தினம் அவர்கள் ஒற்றுமையை விரும்பியவர் என்பதற்காகத் தமிழீழ இயக்க இந்த வாரத்தைத் தமிழ்த் தேசிய ஒற்றுமை வாரம் என்பதாக பிரகடனப்படுத்தி இந்த வாரத்தை நாங்கள் அவரது நினைவாக அனுஷ்டித்துக் கொண்டு வருகின்றோம்.

உண்மையில் இன்று தமிழ் ஈழத்திற்காகப் போராடிய நாங்கள் எங்கு நிற்கின்றோம் என்றால் திசை தெரியாமல் நடு சந்தியிலே தமிழ் கட்சிகள் மாத்திரம் அல்ல தமிழ் மக்களும் நின்று கொண்டிருக்கின்றார்கள்.

87 ஜூலை கால கட்டங்களில் அந்தப் போராட்டம் இறுதிக் கட்டத்தை அடைந்து கொண்டிருந்தது. இந்தியா மக்களுக்கு உணவு மற்றும் மருந்து பொருட்களைக் கடல் வழியாக அனுப்பியது அந்தக் கப்பல் இலங்கை கடற்படையினரால் திருப்பி அனுப்பப்பட்டதுடன் ஆகாய மார்க்கமாக உணவு பொட்டலங்கள் போடப்பட்டது. அது ஜே.ஆர் ஜெயவர்த்தனவிற்கு கொடுக்கப்பட்ட ஒரு மிரட்டல் அந்த மிரட்டலுடன் தான் இலங்கை இந்தியா ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது.

1983ஆம் ஆண்டு ஜூலை ஏற்பட்ட கலவரத்திற்கும் 1987ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை இந்தியா ஒப்பந்தத்திற்கும் இடைப்பட்ட காலம் நான்கு வருடங்கள் இந்த காலத்தில் வட கிழக்கிலே போரினால் கொல்லப்பட்ட தமிழர்கள் என்றால் ஒரு சிலர் நூற்றுக்கணக்கானவர்கள் மாத்திரம் தான் அது மாத்திரமல்லாமல் ஒரு தலைவர் கொல்லப்பட்டார் என்றால் சபாரத்தினம் மாத்திரம் தான்.

நாங்கள் எங்களது போராட்ட வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் பல சந்தர்ப்பங்களில் தவற விட்டு இருக்கின்றோம். அதில் ஒரு சந்தர்ப்பம் தான் இலங்கை இந்தியா ஒப்பந்தம் இலங்கை இந்தியா ஒப்பந்தத்தை நாங்கள் அன்று எங்களுடைய இன பிரச்சினைக்குரிய தீர்வு காண ஒரு ஆரம்பப் புள்ளியாக நாங்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் இன்று வட கிழக்கு இருக்கின்ற நிலைமை வேறாக இருந்திருக்கும்.

ஆனால், நாங்கள் அதனைத் தவற விட்டது என்று நாங்கள் இருக்கும் நிலையை தற்போது எங்களது பிரதேசங்களை எங்களது மாவட்டங்களை எங்களது நிலங்களை எங்களது எல்லைப் புறங்களைக் காப்பாற்ற முடியாத நிலையில் இலங்கை அரசாங்கத்தை நாங்கள் கெஞ்சிக் கொண்டிருக்கின்றோம் 13ஆவது திருத்தச் சட்டத்தை யாவது முழுமையாக நிறைவேற்றுங்கள் என்று.

வரும் ஜனாதிபதித் தேர்தல் இந்த வருட இறுதியிலே இந்த வருடம் முடிவதற்கு முன்பு இந்த நாட்டின் புதியதொரு ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான ஜனாதிபதி தேர்தல் இடம் பெற இருக்கின்றது.

தற்போது களத்தில் எங்களுக்குத் தெரிய மூன்று வேட்பாளர்கள் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச மற்றும் அனுரகுமார திசாநாயக்க இவர்கள் தமிழ் மக்களுக்கு அவர்களது புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினைக்கு ஒரு நிரந்தர தீர்வை காண்பதற்கு என்ன வழி என்று சிந்திப்பதை விடுத்து தமிழ் மக்களது வாக்குகளை எவ்வாறு பெறலாம் என்றே சிந்தனையிலே இருக்கின்றார்கள்.

இந்த நாடு பொருளாதார ரீதியாக கடந்த மூன்று வருடங்களாக அதல பாதாளத்திற்கு சிக்கித் தவிக்கின்றது இந்த பொருளாதார வங்குரோத்து நிலைமைக்கு இந்த நாட்டின் ஜனாதிபதியாக வரத் துடிப்பவர்கள் சிந்திக்கின்றார்கள் இல்லை இலங்கையில் உள்ள இனப்பிரச்சினை தான் முக்கியமான காரணம் என்று.

30 வருடங்களுக்கு மேலாக இலங்கை அரசு போர் செய்திருக்கின்றது ஜே.ஆர். ஜெயவர்த்தன போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம் என்று அந்தப் போரைத் தொடங்கினார். அந்தப் போருக்காக இலங்கை அரசாங்கம் எத்தனை மில்லியன் டொலர்களை ஆயுதங்களுக்காக ஆமட்காரர்களுக்காக கிபீர் விமானங்களுக்காகக் குண்டுகளுக்காக ஏவுகணைக்காக பல்குழல் துப்பாக்கிகளுக்காக எத்தனை பில்லியன் டொலர்களை செலவழித்து இருப்பார்கள் அதனால் இந்த நாட்டிற்கு ஏற்பட்ட நஷ்டம் பாதிப்பு என்ன என்பதனை புரிந்து கொள்ளாமல் தற்போதும் வடகிழக்கு மக்களுக்கு உள்ள பிரச்சினைகளைப் புரிந்து கொள்ளாமல் இருக்கின்றார்கள்.

கோட்டபாய ஜனாதிபதியாக வரும் போது கூறினார் இங்குத் தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினையும் இல்லை பொருளாதார ரீதியாக அவர்கள் வலுப்பெற்றால் சரி என்று ஆனால் தற்போது ஒரு ஜனாதிபதி.

வேட்பாளராக ஒரு ஜனாதிபதி கனவோடு இருக்கும் அனுரகுமார திசாநாயக்க கிளிநொச்சியில் கூறுகின்றார் தான் அரசுக்கு வந்தால் மூன்று வேளை சாப்பாடு கொடுப்பேன் என்று அப்போது இந்த மக்கள் வடகிழக்கு மக்கள் சோற்றுக்காகத் தான் போராடினார்கள் என்பது அவருடைய கணிப்பு.

அதேபோன்று சஜித் பிரேமதாச கூறியதாக மனோ கணேசன் கூறுகின்றார் சஜித் பிரேமதாச 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு தயாராக இருக்கின்றார் என்று.

அதனை இவர் கூறக்கூடாது தமிழ்த் தேசியத்திற்காகத் தமிழ் மக்களது பிரதிநிதிகளாக இருப்பவர்களை அழைத்து அவர் கூற வேண்டும். ஆகக் குறைந்தது அதன் மூன்றாவது திருத்தச் சட்டத்தையாவது அந்த திருத்தச் சட்டத்தில் உள்ளதை உள்ளபடி முழுவதுமாக நான் அமுல்படுத்துவேன் என்பதனை எங்களுக்கு மாத்திரமல்ல சிங்கள மக்களுக்கும் எங்களுக்கு ஒரு கதை வட கிழக்கிற்கு ஒரு கதை தெற்கிற்கு ஒரு கதை கூறாமல் பகிரங்கமாக அறிவித்து அவர்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்திலும் அதனைக் கொண்டு வர வேண்டும் என்றார்.

இந்நிகழ்வில், தமிழீழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தேசிய அமைப்பாளரும் கிழக்கு மாகாணசபையின் முன்னாள் பிரதி தவிசாளருமான பிரசன்னா இந்திரகுமார், மட்டக்களப்பு மாநகரசபையின் முன்னர் பிரதி முதல்வர் க.சத்தியசீலன் உட்பட கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர்.

# சா/த பரீட்சை...

நாடளாவிய ரீதியில் 3,527 பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளதாகவும், அதற்கான அனைத்து ஏற்பாடுகளும் பூர்த்தியாகி உள்ளதாகவும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

# சிசுக்களை...

கணிசமான எண்ணிக்கையிலான குழந்தைகள் வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

பெற்றோர்கள் குழந்தைகளை வேறு நபர்களிடம் கொடுக்கும் போது, அது குறித்த தகவலை பதிவாளர் துறைக்குதெரிவிக்க வேண்டும். பதிவாளர்துறைக்குக் கிடைத்த தகவல்களை ஆய்வு செய்ததில் இந்த உண்மைகள் வெளியாகியுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.

பொருளாதாரச் சிக்கல்கள், திருமணத்துக்குப் புறம்பான உறவுகள் ஊடாக பிறக்கும் குழந்தைகள் மற்றும் சமூகப் பிரச்சனைகளே குழந்தைகளைப் பிறரிடம் தத்து கொடுப்பது அதிகரித்து வருவதற்கு முக்கிய காரணம் என சமூகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நாட்டில் கருக்கலைப்புச் சம்பவங்கள் கணிசமாக அதிகரித்துள்ளதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# சோனார் கப்பல்களை...

இது சம்பந்தமான, இலங்கையின் கோரிக்கையின் அடிப்படையில், கடல்சார் வரைபடத்தை தயாரிப்பதற்கு பயன்படுத்த ஜப்பான் சோனார் பொருத்தப்பட்ட கப்பலை வழங்குவதாக அமைச்சர் சப்ரியிடம் அமைச்சர் கமிகாவா தெரிவித்துள்ளார் என ஜப்பான தூதரகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அழகிய கடலால் சூழப்பட்ட இலங்கை, கூடிய விரைவில் பொருளாதார வளர்ச்சிக்கான பாதையில் தன்னைத் திரும்பக் கொண்டுவந்து, இந்தியப் பெருங்கடலின் மையமாக மேலும் முன்னேற்றம் அடையும் என்றும் அமைச்சர் கமிகாவா நம்பிக்கை தெரிவித்தார் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மீள் மதிப்பீட்டு...

பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான wdoenets.lk அல்லது www.results.exams.gov.lk மூலம் பெறுபேறுகளை பெற்றுக்கொள்ள முடியும்.

# ஹிஜாப் விவகாரம்...

எனவே, பரீட்சை உரிய முறையில் இடம் பெற வேண்டும் என்ற நோக்கில் வெளியிடப்பட்ட இந்த சட்டத்தை முஸ்லிம்கள் கவனத்திற் கொள்வது எல்லா வகையிலும் பொருத்தமானதாக இருக்கும் என தேசிய சூரா சபை தெரிவித்துள்ளது.

அதேவேளை, பரீட்சை மேற்பார்வையாளர்கள் இந்த இரு வரையறைகளையும் பேணிக் கொள்வதற்கு மாணவியருக்கு உதவியாக இருக்க வேண்டும் என்பதனையும் அதற்கு மேல் அவர்களை நிர்ப்பந்திப்பது எவ்வகையிலும் பொருத்தமானது அல்ல என்பதையும் தேசிய சூரா சபை மேலும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

தலையைத் திறக்க வேண்டும், ஹிஜாப்

அணிவதை தவிர்க்க வேண்டும் போன்ற அளவு மீறிய கட்டுப்பாடுகள் அங்கு எப்படியும் செல்லுபடியாகத் தேவையில்லை.

எனவே, பரீட்சாத்தி களும் பரீட்சை மேற்பார்வை யாளர்களும் இது விடயமாகப் பரீட்சை விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்பதனையும் அதே நேரம் முஸ்லிம் மாணவியர் தமது இஸ்லாமியத் தனித்துவங்களை இழக்க வேண்டிய தேவையில்லை என்பதையும் தேசிய ஷூரா சபை குறிப்பிட விரும்புகிறது.

பரீட்சாத்திகள் அமைதியான சூழ்நிலையில், பயம், அச்சமின்றி பரீட்சை எழுதுவதற்குப் பரீட்சை மேற்பார்வையாளர்களது முழுமையான ஒத்துழைப்பும் தேவைப்படுவதாகவும் தேசிய சூரா சபை தெரிவித்துள்ளது.

# சர்வதேச மாநாட்டில்...

மற்றும் பிரதிப் பணிப்பாளர் வி. பிரேமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலுக்கான ஜெனீவா சர்வதேச மையம் (GICHD) மற்றும் ஐக்கிய நாடுகளின் கண்ணிவெடி நடவடிக்கைக்கான ஒருங்கிணைந்த ஒருங்கிணைப்புக் குழு ஆகியவற்றால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டது.

04 பிரதான இடைக்கால கலந்துரையாடல்களை உள்ளடக்கிய இந்த மாநாட்டில் இலங்கையின் தலைமையில் 01 கலந்துரையாடல் மாநாடு நடைபெற்றதும் விசேடமாகும். இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளரும் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தின் பணிப்பாளருமான எஸ்.சத்யானந்த மற்றும் பிரதிப் பணிப்பாளர் வி.பிரேமச்சந்திரன் அவர்களும் கலந்து கொண்டனர்.

மனிதாபிமான கண்ணிவெடி நடவடிக்கைக்கான சர்வதேச மாநாட்டின் படி கண்ணிவெடி அகற்றும் பணியில் ஒவ்வொரு நாடும் அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் செயல்முறையை வெற்றிகரமாக நிர்வகிப்பதில் பெற்ற அனுபவம் மற்றும் அறிவு பரிமாற்றம், சவால்கள் மற்றும் எதிர்கால திட்டங்கள் குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டதாக எஸ். தல்சத்யானந்தா தெரிவித்தார்.

கண்ணிவெடி அகற்றும் பணியில் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து இங்கு விரிவாக கலந்துரையாடப்பட்டது. தற்போது இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் சதுர கி.மீ. 3000க்கும் மேற்பட்ட கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதாகவும், அடுத்த 03 வருடங்களில் இலங்கையை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவது அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும் இன்னும் வடக்கு மற்றும் கிழக்கு பகுதியில் 23 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பில் மாத்திரமே கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டுமெனவும் சத்தியானந்த மாநாட்டில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனிதாபிமான கண்ணிவெடி அகற்றலுக்கான ஜெனிவா சர்வதேச மையத்தின் வழிகாட்டுதலின் கீழ் இலங்கையில் கண்ணிவெடி அகற்றும் பணி நடைபெற்று வருகிறது. இது இலங்கை இராணுவத்தால் Hallo Trust, MAG, Sharp மற்றும் DASH ஆகிய அமைப்புகளுடன் இணைந்து இலங்கை இராணுவம் அதனை நடைமுறைப்படுத்தப்படுகிறது. அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜப்பான், அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து மற்றும் நார்வே போன்ற நாடுகள் இதற்கு நிதியுதவி அளித்து வருகின்றன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் தேசிய கண்ணிவெடி நடவடிக்கை மையத்தின் வீடமைப்பு பணிப்பாளர் டபிள்யூ. எஸ். சத்யானந்த வடக்கு கிழக்கில் கண்ணிவெடிகளை அகற்றி மக்களை மீள்குடியேற்ற இலங்கை எடுத்து வரும் வேலைத்திட்டம் குறித்து மாநாட்டில் கலந்து கொண்ட வெளிநாட்டு பிரதிநிதிகளுக்கு தெரிவிக்க இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தியதாமேலும் தெரிவித்தார்.

மனிதாபிமான கண்ணிவெடிகளை அகற்றும் நாட்டின் தேசிய நடவடிக்கைக்கு தமது பாராட்டுக்களை தெரிவித்ததாக எஸ். சத்யானந்தா கூறினார்.

# தமிழ் பொது...

இதனையடுத்து, இலங்கை தமிழரசுக் கட்சியின் நிலைப்பாடுகள் தொடர்பில் கவனத்தில் கொள்ளப்பட்டது. அப்போது கட்சியின் தலைவர் மாவை.சேனாதிராஜா உள்ளிட்ட பங்கேற்பாளர்கள் கொள்கை அளவில் பொது வேட்பாளர் விடயத்தினை ஏற்றுக்கொள்வதாகத் தெரிவித்துள்ளதோடு, கட்சியாகத் தீர்மானம் எடுப்பதாக இருந்தால் அதன் மத்தியக் குழுக் கூட்டத்தினை நடத்திய பின்னர் தான் உத்தியோகப்பூர்வமான முடிவினை வெளியிட முடியும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதனடிப்படையில், தமிழ் தமிழரசுக் கட்சி தனது மத்தியக் குழுவினை கூட்டி முடிவெடுப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு அடுத்தபடியாக ஜனாதிபதி தேர்தலில் பொது வேட்பாளரைக் களமிறக்குவதற்காக அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் அமைப்புக்களை மையப்படுத்திய பொதுக் கட்டமைப்பை உருவாக்குவதற்காக முன்மொழிவு செய்யப்பட்டது. குறித்த கட்டமைப்பை வினை த்திறனாக ஸ்தாபிப்பதற்காக அனைத்து தரப்பினருடனும் பேச்சுக்களை நடத்துவதற்காக பதினொருவர் கொண்ட குழுவொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் எதிர்வரும் நாட்களில் தமிழ் பொது வேட்பாளர் விடயத்தினை முற்றாக நிராகரிக்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உள்ளிட்ட சகல அரசியல் கட்சிகளும் தனித்தனியாக கலந்துரையாடவுள்ளது.

# சஜித் எதற்காக...

முதலில் அதை செய்யுங்கள். அப்புறம் புறா விடு தூது, அன்னம் விடு தூது, மான் விடு தூது, தென்றல் விடு தூது என்பவைகளை பார்க்கலாம். சஜித்திடமும் பேசலாம்.

தன்னை சந்தித்த "மக்கள்-மனு வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக தூதுக்குழு"விடம் சஜித், தான் 13ஆம் திருத்த மாகாணசபை சட்டத்தை முழுமையாக அமுல் செய்ய உள்ளதாகவும், அதுபற்றி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்க இருப்பதாகவும், அதன் மூலம் சிங்கள மக்களின் ஆணையை பெற உள்ளதாகவும், எனது முன்னிலையில் உறுதி அளித்தார். மக்கள்-மனு வடக்கு கிழக்கு மாகாண சிவில் சமூக தூதுக்குழுவிடம் இதுபற்றி நண்பர் கோவிந்தன் கருணாகரம் எம்பி கேட்டு அறியலாம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர், ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர், கொழும்பு மாவட்ட எம்.பி. மனோ கணேசன் கூறியுள்ளார்.

மட்டக்களப்பில் நடைபெற்ற, தமிழீழ விடுதலை இயக்க தலைவர் அமரர் சபாரத்தினத்தின் நினைவேந்தல் நிகழ்வில், கோவிந்தன் கருணாகரம் மனோ கணேசனை பற்றி வெளியிட்ட கருத்து பற்றி மனோ எம்பி மேலும் கூறியதாவது,

தனது இந்த நிலைப்பாடு பற்றி, சஜித் மே தினம் அன்றும் மீண்டும் ஒருமுறை கூறியுள்ளார். சஜித்தின் இந்த நிலைப்பாடு பற்றியே நான், எனது கிளிநொச்சி மே தின உரையில் தெரிவித்தேன். நான் கிளிநொச்சிக்கு, அங்கு நடைபெற்ற இலங்கை தமிழரசு கட்சியின் மே தின கூட்டத்தில் சிறப்பு பேச்சாளராக, நண்பர் சிவஞானம் சிறிதரன் எம்பியின் அழைப்பை ஏற்று வந்து கலந்து கொண்டேனே தவிர, சஜித்தின் தூதுவராக வரவில்லை. மேலும், எனது உரையில், "நான் கிளிநொச்சிக்கு சஜித்துக்கு வாக்கு கேட்டு வரவில்லை", என்றும் கூட குறிப்பிட்டேன்.

மேலும், 13ஆம் திருத்த மாகாணசபை முறைமையை வடக்கு கிழக்கு மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக நான் ஒருபோதும் கூறவில்லை. அப்படி நான் ஒருபோதும் கூறுவதும் இல்லை. ஆனால், 13ஆம் திருத்த மாகாணசபை முறைமை என்பது இன்றைய அரசியலைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள சட்டம். இது புதிதாக வருகின்ற ஒரு தீர்வு அல்ல. இன்று அரசியல் சட்டத்தில் இருப்பதை அப்படியே அமுல் செய்வதாகதான் சஜித் கூறி உள்ளார். மேலும் மாகாணசபை முறைமை என்பது வடக்கு, கிழக்கு மாகாணங்களை மாத்திரம் சார்ந்தது இல்லை. அது ஒன்பது மாகாணங்களையும் சார்ந்தது. ஆகவே சஜித், வடக்கு கிழக்குக்கு மாத்திரம் அல்ல, முழு நாட்டுக்குமே இந்த உத்தரவாதத்தை வழங்கி உள்ளார் என்பதை தமிழ் கட்சிகள் அறிய வேண்டும். இப்படி சஜித் கூறுவதை போன்று, ஏனைய பெரும்பான்மை கட்சிகளின் உத்தேச ஜனாதிபதி தேர்தல் வேட்பாளர்களும் கூறுவார்களா என தமிழரசு கட்சி கேட்டு பார்க்க வேண்டும் எனவும் நான் என் உரையில் கூறினேன்.

13ஆம் திருத்த மாகாணசபை முறைமை என்பது கையில் இருக்கும் குருவி. இன்றைய அரசியல் சட்டத்தில் இருப்பதை முதலில் அமுல் செய்தால்தானே, அதையடுத்து புதிய அரசியல் சட்ட தீர்வுக்கு போகலாம்? மற்றபடி, நண்பர் கோவிந்தன் கருணாகரம், நண்பர் சீ. வி. ஆகியோர் இன்று ஆர்வத்துடன் முன்னெடுக்கும், தமிழ் பொது வேட்பாளர் என்ற யோசனையை மறுதலித்தும் நான் பேசவில்லை. தமிழ் கட்சிகளுக்கு, தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த முழு உரிமை உள்ளது என்றுதான் கூறினேன். மேலும், தமிழ் பொது வேட்பாளர் கோஷம் என்பது வடக்கு கிழக்குக்குக்கு மாத்திரம் பொருந்தும். மலையகம் உட்பட தென்னிலங்கைக்கு பொருந்தாது. ஏனெனில் வடக்கு கிழக்கு ஒரு தளம். மலையகம் உட்பட தெற்கு வேறொரு தளம். இதையும் எனது உரையில் கூறினேன்.

இவ்விடயங்கள் தொடர்பில், வரலாறு முழுக்க எனக்கு மிக தெளிவான நிலைபாடுகள் இருப்பதாக நம்புகிறேன். இதை நண்பர் கோவிந்தன் கருணாகரம் எம்.பி அறிய வேண்டும். என்னிடம் தடுமாற்றங்கள் கிடையாது என்றார்.

# உப்பாறில் மண்டை ஓடும்...

குறித்த ஆற்றில் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர் ஒருவின் வலையில் மண்டை ஓடு மற்றும் இரு எலும்புக் கூடுகள் சிக்கியதையடுத்து அதனைக் கரைக்குக் கொண்டுவந்தனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்துக்கு பொலிஸ் தடயவியல் பிரிவினர் அழைக்கப்பட்டு விசாரணையில் 40 வயதுக்கு உட்பட்ட ஆண் ஒருவரின் மண்டை ஓடு என பகுப்பாய்வாளர்கள் தெரிவித்தனர்.

இந்த நிலையில் ஏறாவூர் சுற்றுலா நீதிமன்ற மேலதிக நீதவானும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற பதில் நீதவானுமாகிய தர்சினி சம்பவ இடத்துக்குச் சென்று மண்டை ஓட்டை பார்வையிட்டு பரிசோதனைக்கு உட்படுத்துமாறு உத்தரவிட்டதையடுத்து மீட்கப்பட்ட மண்டை ஓடு எலும்புகள் மட்டு. போதனா வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# யாழில் சட்டவிரோதமான...

இதன்போது நான்கு மாடுகள் வெட்டப்பட்டு தலைகள் உட்பட மாட்டின் உடற் பகுதிகள் அந்த பகுதியில் காணப்படுகின்றன. 21 மாடுகள் உயிருடன் மீட்கப்பட்டன. அத்துடன் 4 பெரிய ஆடுகள், இரண்டு குட்டி ஆடுகளும் மீட்கப்பட்டன. திருட்டு மாடுகள் பிடித்து வரப்பட்டு இந்த இடத்தில் வைத்து வெட்டப்படுகின்றது.

ஒரு நாளைக்கு 6 மாடுகள் வெட்டப்படுவதாகக் கூறப்படுகிறது. மாடு வெட்டிக் கொண்டிருக்கும்போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதில் இராணுவ புலனாய்வு பிரிவினருக்கும் தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

மாடுகளுக்கு உணவு மற்றும் தண்ணீர் வைக்காமல், உயிருடன் மீட்கப்பட்ட மாடுகள் உணவுகள் இன்றி காணப்படுகின்றன. மீட்கப்பட்ட மாடுகளுக்கு பொலிஸாரே தண்ணீர் வைத்தனர்.

# “கோட்டாபய தொடர்பில் நிரூபிக்க முடியும்”

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, கடந்த 2021ஆம் ஆண்டு என்னுடன் தொலைபேசியில் உரையாடியபோது, அவர் கூறியதை மறுக்க முடியாது என்று கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஞாயிற்றுக்கிழமை (05) தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அண்மைய அறிக்கையைக் குறிப்பிட்ட கர்தினால், ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த முடியாது, ஏனெனில், தனக்கு நெருக்கமானவர்கள் மற்றும் சங்கங்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி கூறியதை மறுத்துள்ளார்.

“2021 பெப்ரவரி 2ஆம் திகதியன்று முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய என்னுடன் தொலைபேசியில் பேசியதை நானும் எனது செயலாளரும் உறுதிப்படுத்தி நிரூபிக்க முடியும். உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களை விசாரித்த



ஜனாதிபதி ஆணைக்குழு இஸ்லாமியத் தீவிரவாத அமைப்புகளைத் தடை செய்ய மட்டுமே பரிந்துரைத்துள்ளது என்று சமீபத்தில் ராஜபக்ஷ கூறியுள்ளார்.

இஸ்லாமியம் அல்லாத ஒரு அமைப்பையும் தடை செய்யுமாறு அறிக்கை தெளிவாகப் பரிந்துரைத்துள்ளது, இந்த உண்மைகளை முன்னாள் ஜனாதிபதி மறுக்க முடியாது” என்று கர்தினால் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணை நடத்திய புலனாய்வு அதிகாரிகளை முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இடமாற்றம் செய்துள்ளதாக கர்தினால் குற்றம் சுமத்தியுள்ளார். மேலும், ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தற்போதைய அரசாங்கம் தவறிவிட்டதாக கர்தினால் குற்றம் சுமத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு ஆணைக்குழு பரிந்துரை செய்த போதிலும், அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்காதது ஏன் என கர்தினால் கேள்வி எழுப்பியுள்ளார்.

“தற்போதைய அரசாங்கம் உயிர்த்த ஞாயிறு குண்டுத் தாக்குதல்களுடன் தொடர்புடைய அனைத்தையும் கம்பளத்தின் கீழ் தொடர்ந்து தள்ளுகிறது” என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# வீதி விபத்தில் சாரதி காயம்

செ.தி.பெருமாள்

நோட்டன் - மஸ்கெலியா பிரதான வீதியில் பயணித்த வேன் ஒன்று விபத்துக்குள்ளானதில், அதன் சாரதி காயமடைந்து மஸ்கெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிரிவன்நெலிய பகுதியில் உள்ள மடத்திற்கு அருகில் வைத்து வீதியை விட்டு விலகிய இவ்விபத்தில் 39 வயதுடைய நிஹால் குமார என்பவரே காயமடைந்துள்ளார் என நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அவர் கிறிவான்நெலிய மடத்திற்குப் பக்தர்கள் குழுவொன்றை அழைத்துச் சென்று, அவர்களை விட்டு விட்டுத் திரும்பிய போது வேன் மடத்திற்கு




அருகில் உள்ள குன்றின் மீது மோதுண்டு கவிழ்ந்து வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாக நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை நோட்டன் பிரிட்ஜ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தீ பிடித்ததில் முச்சக்கரவண்டி நாசம்

செ.தி.பெருமாள்

தலவாக்கலை - நுவரெலியா வீதியில் பயணித்த முச்சக்கரவண்டி ஒன்று நானுஓயா தபால் நிலையத்திற்கு முன்பாக வைத்துத் தீப்பிடித்து முற்றாக எரிந்து நாசமாகியுள்ள சம்பவம் வெள்ளிக்கிழமை (03) இடம்பெற்றுள்ளது.

நோட்டபிரிட்ஜில் இருந்து நுவரெலியா நோக்கிப் பயணித்த முச்சக்கரவண்டியொன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.



முச்சக்கரவண்டியில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாகவே தீ விபத்து ஏற்பட்டுள்ளதாக நானுஓயா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சி.சி.ரி.வி. கேமராவை மறந்த பெண் கான்ஸ்டபிள்

கண்டியில் ஆடை விற்பனை நிலையமொன்றில் இருந்து பெண்ணொருவரின் பணப்பையைத் திருடியதாகக் கூறப்படும் பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கண்டி தலைமையக பொலிஸாரின் குற்றப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பணப்பையின் உரிமையாளர் ஏப்ரல் 9ஆம் திகதி ஆடை விற்பனை நிலையமொன்றுக்குச் சென்று, பையை ஒதுக்கி வைத்துவிட்டு, ஒரு ஆடையைச் சரிபார்த்து, மீண்டும் பையை எடுத்துப் பார்த்தபோது, அதில் பணப்பை இல்லாதமையால் கண்டி தலைமையக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அதன் பிரகாரம் குற்றப் பிரிவினரால் மேற்கொண்ட விசாரணையின் பின்னர், குறித்த ஆடை விற்பனை நிலையத்தின் கண்காணிப்பு கேமராவை சோதனையிட்ட போது, பெண் ஒருவர் கைப்பையைத் திறந்து பணப்பையை திருடிச் சென்றதைக் காணொளியாகப் பதிவாகியுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய சந்தேகநபரை கைது செய்து தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, குறித்த பெண் பொக்காவல பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.





# புத்தாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் இலங்கைக்கு விஜயம்

வி.ரி.சகாதேவராஜா

இந்தியாவின் ஸ்ரீமத் பரசமய கோளறி நாதர் ஆதீன 39ஆவது குரு மகா சன்னிதான பீடத் தலைவர் புத்தாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

அவர் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் வட மாகாணம் பூராக 9 நாள் விஜயத்தை மேற்கொள்ள உள்ளத்துடன் முதல் நாள் விஜயம் அம்பாறை மாவட்டத்தில் வெள்ளிக்கிழமை (03) இடம் பெற்றுள்ளது.

# 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு

நிதர்ஷன் வினோத்

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் சிறீ சபாரெத்தினத்தின் 38ஆவது நினைவேந்தல் நிகழ்வு, புலிகளால் அன்னார் சுட்டுக்கொல்லப்பட்ட கோண்டாவில் அன்னங்கை தோட்ட வெளியில், தோழர் சிறீசபாரட்ணம் நினைவேந்தல் குழு தலைவர் எஸ்.செந்தூரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை(05) காலை இடம்பெற்றுள்ளது.

இந்த நினைவேந்தல் நிகழ்வு டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலில் 2007 முதல் மே மாதம் 05ஆம் திகதி இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.





# மின்சார திட்டம் திறந்து வைப்பு



எம்.எப்.றிபாஸ்

அட்டாளச்சினை-சம்புகளப்பு வீதிக்கு மின்சாரம் வழங்கும் வேலைத் திட்டம் உத்தியோகபூர்வமாக சனிக்கிழமை (04) திறந்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளர் எம்.ஐ.எம்.பாயிஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வுக்கு, தேசிய காங்கிரஸின் தேசியத் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாஉல்லஹ் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண முதலமைச்சின் முன்னாள் செயலாளர் யூ.எல்.ஏ.அஸீஸ், சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா, அட்டாளச்சேனை உதவி பிரதேச செயலாளர் நஜிஹா முஸாபீர், பெரிய பள்ளிவாசல் தலைவர் ஏ.எல்.ஏ.அனிஸ், செயலாளர் எம்.எஸ்.எம். ஜௌபர் மற்றும் கல்வியியலாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச மக்களின் நீண்ட கால தேவையாகவிருந்து இவ்வீதிக்கு மின்சாரம் இடப்பட்டமையையிட்டு மக்கள் நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கின்றனர்.

# மருத்துவ உபகரணங்கள் கையளிப்பு

றியாஸ் ஆதம்

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை அபிவிருத்தி தொடர்பான விசேட கூட்டம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி சகீலா இஸ்ஸடீன் தலைமையில் சனிக்கிழமை (04) இடம்பெற்றது.

திருக்கோவில் ஆதார வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் அவ்வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் ஏ.பி.மசூத், பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சி.எம்.மாஹிர் உட்பட வைத்தியசாலை அபிவிருத்தி குழுவினரும் கலந்துகொண்டனர்.



புதிதாகக் குருதி சுத்திகரிப்பு (dialysis unit) பிரிவினை நிறுவுதல்.

வைத்தியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்து மேலதிகமாகவும் வைத்தியர்களை நியமித்தல்.

இயன் மருத்துவ பிரிவிற்குத் தேவையான உபகரணங்களை வழங்கி அதனை திறம்பட இயங்கச் செய்தல்.

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது

ரஸீன் ரஸ்மின்

சட்டவிரோதமான முறையில் வெளிநாட்டு சிகரெட்டுகளை மோட்டார் சைக்கிளில் கொண்டு சென்ற நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை (03) கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் போக்குவரத்து பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, பாலாவி பகுதியில் வைத்து சந்தேகத்திற்கிடமான மோட்டார் சைக்கிளை நிறுத்தி சோதனைக்கு உட்படுத்திய போதே




40 பெட்டிகளில் அடைக்கப்பட்ட 800 வெளிநாட்டு சிகரெட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரும் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட வெளிநாட்டு சிகரெட்டுகள் மற்றும் போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்பட்ட மோட்டார் சைக்கிளும் மேலதிக நடவடிக்கைகளுக்காக புத்தளம் தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பிலான மேலதிக விசாரணைகளை புத்தளம் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆயுர்வேத மூலிகைத் தோட்டம்

எம்.எஸ்.எம்.ஹனீபா

சம்மாந்துறை- மல்வத்தையில் அமைந்துள்ள தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான 28 ஏக்கர் காணியில் ஆயுர்வேத மூலிகைத் தோட்டம் அமைக்கப்படவுள்ளதாக, அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்துள்ளார்.

மாகாண ஆயுர்வேத மூலிகை உற்பத்தி, பாதுகாப்பு மற்றும் மீள் உற்பத்தி திட்டத்தின் கீழ் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படவுள்ள இடத்தினை கிழக்கு மாகாண ஆயுர்வேத திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் டாக்டர் எம்.ஏ.நபீல், ஆயுர்வேத, சுதேச வைத்தியர்களும் மற்றும் தென்கிழக்கு பல்கலைக்கழக துறைசார் அதிகாரிகளும் சனிக்கிழமை (04) விஜயம் செய்து கள ஆய்வினை மேற்கொண்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்கிழக்கு பல்கலைக்கழக தொழில் நுட்பவியல் மற்றும் பிரயோக விஞ்ஞான பீடத்தின் எற்பாட்டில் அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்,இந்திய ஆயுர்வேத வைத்திய நிபுணர்களுடன் இணைந்து இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அம்பாறை பொது வைத்தியசாலையுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதற்கான திட்ட வரைபுகளும் முன்னொழியப்பட்டுள்ளதாவும், இலங்கையின் மூலிகை பயிர்களைப் பாதுகாப்பதுடன், கிழக்கு மாகாணத்திற்குத் தேவையான ஆயுர்வேத மருந்து உற்பத்தியையும் மேற் கொள்ள முடியும் , இம் மூலிகைத் தோட்டம் அமைக்கப்படும் பட்சத்தில் சுகாதார சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதோடு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும் பங்களிப்பை வழங்க முடியுமெனவும் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம். றிபாஸ் தெரிவித்துள்ளார்.மேலும் , அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிலுள்ள ஒவ்வொரு ஆயுர்வேத வைத்தியசாலைகளிலும் பொது மக்களுக்குத் தேவையான அத்தியாவசியமான மூலிகைகள் பலவற்றை நடுகை செய்து அவற்றை மக்களுக்கு அறிமுகம் செய்து அதற்கான நாற்றுகளை அவர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.



# வீசா வருமானத்தை உள்நாட்டில் தக்க வைத்துக்கொள்ள நடவடிக்கை வேண்டும்

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளிநாட்டவர்களுக்கு உள்வருகையின் போதான வீசா வழங்கலில் காணப்படும் பிரச்சினை அண்மையில் சமூக வலைத்தளங்களில் வெளியாகியிருந்த ஒரு இளைஞனின் கருத்து வெளியிடலுடனான வீடியோ தொடர்பில் பரவலாகப் பேசப்பட்டது.

இந்தியாவைத் தளமாகக் கொண்டியங்கும் “விஎஃப்எஸ் குளோபல்” எனும் நிறுவனத்துக்கு அமைச்சரவை அனுமதியுடன் இந்த பணியை முன்னெடுப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில் கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் இந்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

இந்த நடவடிக்கைகளில் உண்மையில் பிரச்சனை காணப்படுவதைச் சம்பந்தப்பட்ட உயரதிகாரிகள் அவதானிக்கத் தவறியிருந்த நிலையில், குறித்த வீடியோவை வெளியிட்ட இளைஞரினால் இந்த விடயம் பற்றிச் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

உண்மையில் இந்த நிறுவனத்துக்கு இந்த சேவையை மேற்கொள்வதற்கான அனுமதி ஏன் வழங்கப்பட்டது? அவ்வாறு ஏன் வழங்கப்பட வேண்டும்? இதுவரை காலமும் உள்நாட்டில் காணப்பட்ட முறைமை ஏன் இடைநிறுத்தப்பட்டது? ஏன் ஏற்கனவே காணப்பட்ட முறைமையை மேம்படுத்தி நடைமுறைப்படுத்தாமல், வெளிநாட்டு நிறுவனமொன்றுக்கு இந்த பணி ஒப்படைக்கப்பட்டது? போன்ற பல கேள்விகள் எழுந்துள்ள நிலையில், இவற்றுக்குச் சம்பந்தப்பட்ட சுற்றுலாத் துறை அமைச்சரிடமிருந்து கிடைத்திருந்த பதில் இந்நிறுவனம் சாதாரண நிறுவனமல்ல, வெளிநாடுகளிலும் இவ்வாறான பணிகளை முன்னெடுக்கின்றமையால் அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கும் என்பதாக அமைந்திருந்தது.

மேலும் இந்த முறைமையில் காணப்படும் சிக்கல்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு நேரடியாகக் கடிதம் அனுப்பியுள்ள சுற்றுலாத் துறைசார் செயற்பாட்டாளர்கள், இந்த முறைமையில் காணப்படும் மூன்று பிரதான சிக்கல்கள் குறித்துக் குறிப்பிட்டுள்ளனர்.

அதில் பிரதானமாக அதிகரித்த வீசா கட்டணம் உள்ளடங்கியுள்ளது. குறிப்பாக, முன்னர் 30 நாட்கள் காலப்பகுதிக்கான வீசா அனுமதிக்குக் குறைந்த கட்டணம் அறவிடப்பட்ட நிலையில், தற்போது இந்த காலப்பகுதி 6 மாதங்களாக அதிகரிக்கப்பட்டு, ஒன்றுக்கு மேற்பட்ட பிரவேசமாக மாற்றப்பட்டு அதற்காக 100.47 அமெரிக்க டொலர்கள் ஒரு நபரிடமிருந்து அறவிடப்படுவது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால், ஆசியப் பிராந்திய நாடுகளில் சுற்றுலாப் பயணிகளிடமிருந்து அறவிடப்படும் உயர்ந்த வீசா கட்டணம் காணப்படும் நாடாக இலங்கை மாறியுள்ளது. இதனால் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்படலாம். இதர போட்டிகரமான நாடுகளில் குறைந்த கட்டணம் காணப்படுவதால் அந்நாடுகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் செல்லக்கூடும் என்பது இரண்டாவது விடயமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த புதிய கட்டமைப்பின் விண்ணப்ப கையாளல் முறைமை சிக்கல்கள் நிறைந்ததாகவும், முன்னர் காணப்பட்ட முறைமை எளிமையானதாகவும் காணப்பட்டதாக மூன்றாவது விடயத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

இந்நிலையில், இந்த வெளிநாட்டு நிறுவனத்தின் செயற்பாடுகள் தற்போது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும், தொழில்நுட்ப கோளாறு என அறிவித்தல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தலையிட்டு, நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்களிப்பை வழங்கும் சுற்றுலாத் துறையில் அண்மையில் ஏற்பட்ட மறுமலர்ச்சியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ளும் வகையில், போட்டிகரமான வகையில் விலையிடல்களை மேற்கொள்வது, அந்நியச் செலாவணி வருமானத்தை இயலுமானவரை உள்நாட்டில் தக்க வைத்துக் கொள்வதற்கு வழிவகை செய்வது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

தவறுகளைத் தொடர்ந்தும் செய்வேன் எனக் கங்கணம் கட்டுபவர்கள், தங்களைத் தாங்களே சித்திரவதைக்குள்ளாக்கி அழிந்தே போய்விடுவார்கள். பலகோடி மக்கள் வாழும் பூமி இது.

ஆனால், இத்தகையவர்களின் செயல்களால், மக்கள் படும் அவஸ்தைகள் சொல்லில் அடங்காது. கல்லூரிகள் வழிபாட்டு ஸ்தலங்கள், மக்கள் கூடும் இடங்களில் பயங்கரவாத நடவடிக்கைகள் நடக்கும் போதும் ஏற்படும் இழப்புக்கள் ஏராளம், ஏராளம்.

இவற்றைத் தவிர்க்கமுடியாது நாடுகள் கலங்குகின்றன. அமைதி பலருக்கும் பிடிப்பதில்லை. கொலைஞர்கள் தங்களைப் போன்றவர்களை உருவாக்குவதில் தீவிரமாக இருக்கின்றனர்.

இவர்களில் தீவிரவாதம் எது, நற்செயல் எதுவெனத் தெரியவே தெரியாது வாழ்கின்றனர். தாய், தந்தை, சகோதரர், உற்றம் சுற்றமுடன் இணைந்தவர்கள் கூட இரக்கமின்றி விஷம் சுரக்க எப்படி உருவாகினார்கள்?

அகண்ட பூமியில் அடங்காத மனிதர் இவர்கள், அன்பு, நேயம், இரக்க இன்மையால் பூமிக்குத் துன்பம் இருந்தபடியே உள்ளது. காலம் மாறும் பார்ப்போம்.

–பருத்தியூர் பால– வைரவநாதன்

# தமிழர்களின் அபிலாஷை நிறைவேறும் ஜனாதிபதித் தேர்தல்

லக்ஸ்மன்

தேர்தல் ஒத்திகைகளை மே தினக் கூட்டங்களின் போது கட்சிகள் நடத்தி முடித்திருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய பிரதான கட்சிகள் தலைநகர் கொழும்பையே தங்களது கூட்டங்களுக்குப் பயன்படுத்தியுள்ளன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கம்பஹாவிலும், இலங்கைத் தமிழரசுக் கட்சி கிளிநொச்சியிலும், ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி யாழ்ப்பாணத்திலும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கொட்டகலையிலும் என தங்களது மே தினக் கூட்டங்களையும் நடத்தியிருக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் ஒக்டோபர் மாதமளவில் நடைபெறவுள்ளதாக அறியமுடிகிறது. பிரதானமாக மூவரே போட்டியிடுவர் என ஊடகங்கள் சொல்லப்பட்டாலும், அந்தப்பட்டியல் நீளலாம் என்றும் எதிர்வு கூறப்படுகிறது.

எது எவ்வாறானாலும் எந்தவொரு வேட்பாளரும் அரைவாசிக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது உறுதியாகவே இருக்கிறது. அப்படியானால் அடுத்த ஜனாதிபதித் தேர்வு இரண்டாம், மூன்றாம் விருப்புகளின் அடிப்படையில் நடைபெறும்.

தேசியக் கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர்கள் எப்போதும் பெரும்பான்மை மக்களின் வாக்குகளையே நம்பி தேர்தல் களத்தில் இறங்குவது வழமை.

அந்த வகையில், தான் கடந்த முறை நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ

69 இலட்சம் பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் ஜனாதிபதியானார். இம்முறையும் அவருடைய சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரே ஜனாதிபதியாவார் என்று அக்கட்சி தெரிவித்திருக்கிறது. சிலவளைகளில் அதுவும் நடைபெறலாம்.

இதற்கிடையில் தமிழர் தரப்பு இம்முறை நடைபெறவுள்ள தேர்தலில் தமிழர் ஒருவரைப் பொது வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று மும்முரமான முயற்சியில் இறங்கியிருக்கிறது.

கடந்த சனிக்கிழமையும் வடக்கு கிழக்கு சிவில் சமூக குழுவின் ஏற்பாட்டில் மக்கள் மனு கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றிருக்கிறது.

கடந்த மாத ஆரம்பத்தில் மட்டக்களப்பில் இடம்பெற்ற மக்கள் மனு கலந்துரையாடலில், தமிழ் பொது வேட்பாளர் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

அரசியல் கட்சிகளின் தலைவர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் என பலரும் தங்களின் ஆதரவைத் தெரிவித்திருக்கின்ற தமிழ்ப் பொது வேட்பாளர் விவகாரம் தமிழர் பக்கம் கொஞ்சம் சலசலப்பை ஏற்படுத்தியிருக்கிறது என்பது மாத்திரம் உண்மைதான்.

தமிழர் தரப்பு இன விடுதலைக்கான போராட்டத்தில் இதுவரை நடத்திய எந்தவொரு முயற்சியிலும் மீற்றர் கணக்கில் ஏறிவிடவில்லை. மாறாகச் சாண் ஏற முழம் சறுக்கும் வகையிலேயே அனைத்து விடயங்களும் நடந்தேறியிருக்கின்றன. இப்படியிருக்கையில் இப்போது முன்வைக்கப்பட்டு வருகின்ற ஜனாதிபதித் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம் இன்னமும் தமிழர் அரசியலில் தரப்பினரிடம் முரரண்பாடுகளையே தோற்றுவிக்கும் என்ற கருத்துக்களும் நிலவுகின்றன.

ஏதாவது நடந்து விட்டால் நம் அரசியல் எதிர்காலம் என்னவாவது என்ற சிந்தனையில் குறிப்பிட்டளவான அரசியல்வாதிகள் தங்கள் கருத்துக்களையும் ஆதரவுகளையும் வழங்கிவரும் இந்த இடத்தில்தான் தமிழ்ப் பொது வேட்பாளரின் உண்மை நிலைவரம் இந்த இடத்தில் ஆராயப்பட வேண்டும்.

மக்கள் மனுக் கலந்துரையாடல்களில், அதிகாரத்தைப் பெறும் முயற்சியில் இதுவரையில் ஈழத் தமிழர்களால், இருக்கும் நிலையிலிருந்து ஒரு படி கூட, முன்னோக்கிப் பயணிக்க முடியவில்லை. அனைத்திலும் தோல்வியே அனுபவமாக இருக்கின்றது. வழமையான அணுகுமுறைகள், வழமையான கதைகளால் பயனில்லை.

புதிய வழிமுறைகள் தொடர்பில் நாம் சிந்திக்க வேண்டும். புதிய வழிமுறைகளில் தோல்வி ஏற்பட்டால் கூட, அது ஒரு புதிய அனுபவத்தையே நமக்குத் தரும். பழைய முறையில் செயற்படும் போது, மீண்டும் பழைய அனுபவங்களே கிடைக்கும். பழைய அனுபவங்களைப் பெறுவதற்காக, எதற்காக நாம் செயற்பட வேண்டும்? பழைய அனுபவங்கள்தான், ஏற்கனவே நமக்கு, தோல்வியைக் கற்றுத்தந்துவிட்டதே! சிந்திக்கப் பழகுவதே இப்போது, முக்கியமானது என்ற வகையிலான கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன.

தேசிய அரசியல் சூழல் தேர்தல் ஒத்திகைகளை ஆரம்பித்திருக்கின்ற நிலையில், தமிழ் பிரதேசங்களின் அரசியல் நிலைமைகள் பொது வேட்பாளருக்காக சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளன. வழமையைப்போல் தமிழ் மக்களின் தேசிய அபிலாஷைகளை சிதறடிக்கும் வண்ணம் அமைந்துவிடாதிருந்தால் சரி என்று சில தரப்புக்கள் வாய்மூடி மௌனிகளாகவும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

அகிம்சை வழிப் போராட்டங்களால் பயனில்லையென்று வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் பின்னர், சுதுமலைப்பிரகடனம் செய்யப்பட்டு, திம்பு பேச்சுவார்த்தை அதன் பின் 1987இல் தமிழ் மக்களைப் பாதுகாக்கும் வகையில் இந்திய நலன் கருதிச் செய்யப்பட்ட சர்வதேச ஒப்பந்தமான இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கு 37 வருடங்களைக் கடந்து விட்டது. ஆனாலும், அது கூட இலங்கையில் முழுமையாக அமுலுக்குவரவில்லை. ஆளுநர் மாத்திரமே அதிகாரத்துடன் இருக்கிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகளால் தமிழ் மக்களுக்கு இலங்கை இந்திய ஒப்பந்தம் ஒரு முழுமையான தீர்வாகாது என நிராகரிக்கப்பட்டது. புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமான மோதலும் அதனைத் தொடர்ந்து யுத்தம் 2009 மௌனிக்கும் வரை நடந்த மோதல்களும் அவற்றின் எதிரொலியாகப் புலிகள் அளிக்கப்பட்டதும் தமிழினம் அரசியல் சமூக பொருளாதார கல்வி ரீதியான பாரிய பின்னடைவைச் சந்தித்ததும் எழுதப்படாத வரலாறு ஆகிவிட்டது.

யுத்தம் நிறைவுற்று 11 ஆண்டுகளான சூழ்நிலையில் 2015 தமிழ் மக்களது பிரச்சினையைத் தீர்ப்பதாக நல்லாட்சி அரசு தனது நல்லாட்சி மூலம் சிங்கள தேசிய அபிமானத்தைப் பெறுவதற்காகவும் யுத்தத்தின் மூலம் சர்வதேச அரங்கில் இலங்கை தீவு அடைந்த அபகீர்த்தியைத் துடைப்பதற்கு ஜெனிவா மனித உரிமை கருத்தாடல்கள் இருந்து தப்பித்துக் கொள்வதற்கும் குற்றவாளிகளைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் காணாமல் போனோரை ஏமாற்றுவதற்கும் தமது ஆட்சி அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்தியது.

அதன் பின்னர் கோட்டாபய ஜனாதிபதியானார். அவர் மக்கள் போராட்டம்

மூலமாக விரட்டப்பட்டார். புதிய ஜனாதிபதியாகப் பாராளுமன்றம் மூலம் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவானார். இப்போதும் தமிழ் மக்கள் விடயத்தில் அவருடைய திருகுதாளங்களை நடத்தி வருகிறார்.

ஆட்சி அதிகார முறைகேடுகளுக்கு தீர்வு தங்களிடமிருப்பதாக அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான மக்கள் விடுதலை முன்னணியும், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியும் கங்கணம் கட்டிக்கொண்டு களத்தில் இருக்கின்றன.

ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான சவால்களுக்கு முகம் கொடுக்க முனைபவர்கள் ஒவ்வொருவரிடமும் ஆட்சியைய்யும் அதிகாரத்தையும் கொடுத்துவிட்டு ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்கும் மக்கள் காத்திருக்கும் நிலைமையே நாட்டில் காணப்படுகிறது.

பெரும்பான்மை மக்களையும் தேசியக் கட்சிகளையும் பொறுத்தவரையில் தமிழ் மக்களுடைய பிரச்சினையானது சிறுபான்மை மக்களை ஏமாற்றுவதற்கானது மாத்திரமே.

இத்தகையதொரு அரசியல் பின்புலத்தில்தான் தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலைச் சந்திக்கப் போகிறது. ஒருவேளை தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்பட்டால், அது மீண்டுமொரு மூக்குடைவையே தரும் என்பது நிச்சயம். அதனை இல்லாமல் செய்வதற்குத் தமிழர்களிடம் என்ன சூட்சுமம் இருக்கிறது என்றே நாம் கேள்வியெழுப்ப முடியும்.

அந்தவகையில்தான், தமிழ் பிரதேசங்களில் தொல்லியல் விடயங்கள் குறித்த பிரச்சினைகள், மேய்ச்சல் தரை விவசாய பூமிகள் கையாளுதல், கல்முனை வடக்கு பிரதேச செயலகம் போன்ற பிரதேச அதிகாரப்பங்கீடுகள், பாரம்பரியமான தமிழர் பிரதேசங்களில் முன் நகர்த்தப்படுகின்ற குடியேற்றங்கள் முதலான பல்வேறு விடயங்களுக்கும் மேலாகத் தமிழர்கள் எதிர்பார்க்கின்ற இனப்பிரச்சினைத் தீர்வுக்கான அதிகாரப் பரவலாக்கல் எவ்வாறு கையாளப்படும் என்பது முக்கியமானது.

எது எவ்வாறானாலும், ஒவ்வொரு தடவைகளிலும் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தல்களையும் தமிழர்களின் அபிலாசை நிறைவேறும் ஜனாதிபதித் தேர்தல் என்றே தமிழர்கள் நம்பிக்கை கொண்டிருப்பர். ஆனால், வழமையான எதிர்பார்ப்பு நிறைவேறாது வீணாகிப்போவதே நடைபெற்றிருக்கிறது. இம்முறையேனும் அது நிறைவேற வேண்டும் என்று நம்பிக்கை கொள்வோம்.

இந்த இடத்தில்தான் ஒவ்வொரு முனையிலும் தோற்றுப் போனவர்களாக நிரூபிக்கப்படுதல் இல்லையென்றாகவேண்டும்.

## கடிதங்கள்

### கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரிப்பு



அம்பாறை மாவட்டம் கல்முனை மாநகர சபைக்குட்பட்ட வீதிகள் கடற்கரை பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதனால் விபத்துக்கள் ஏற்படுகின்றன.

உள் வீதிகளில் மக்கள் நடமாட முடியாத அளவுக்குக் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துக் காணப்படுவதுடன் வீதியில் செல்பவர்களைத் தெரு நாய்கள் கடிக்க வருகின்றன.

மேலும், வீதிகள் கடற்கரை பகுதிகளில் கொட்டப்படும் கழிவுகள் உரிய முறையில் அகற்றப்படாமையினால்

கட்டாக்காலிகளாக நாய்கள் இப்பகுதிகளில் உட்பிரவேசிக்கின்றன.

எனவே, கட்டாக்காலி நாய்களின் நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தி மக்களை விபத்துக்களில் இருந்து பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– ஷிஹான் பாறுக்

# USDA உப செயலாளர் டெய்லர், நியு அந்தனீஸ் பார்ம்ஸ்க்கு விஜயம்

அமெரிக்க விவசாயத் திணைக்களத்தின் (USDA) வர்த்தக மற்றும் வெளிநாட்டு விவசாய விவகாரங்களுக்கான உப செயலாளர் அலெக்சிஸ் டெய்லர் அண்மையில் ஹங்வெல்லவில் அமைந்துள்ள நியு அந்தனீஸ் பார்ம்ஸ் பகுதிக்கு விஜயம் செய்திருந்தார். இலங்கையின் முன்னணி கோழிப்பண்ணைச் செய்கையாளர்களாகத் திகழும் நியு அந்தனீஸ் பார்ம்ஸ், நிலைபேறாண்மை தொடர்பில் பின்பற்றும் செயன்முறைகளையும், அமெரிக்காவுடன் கட்டியெழுப்பும் பிணைப்புகளையும் அவர் பாராட்டியிருந்தார்.




நியு அந்தனீஸைப் பொறுத்தமட்டில் இந்த விஜயம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்திருப்பதுடன், தமது உற்பத்திச் செயன்முறையில் நிலைபேறாண்மையை பின்பற்றிய நவீன வசதிகள் படைத்த பண்ணையை வெளிப்படுத்தக் கூடியதாக இருந்தது. உப செயலாளர் டெய்லர் தமது இலங்கைக்கான விஜயத்தின் போது, நாட்டின் விவசாயத் துறைக்கு USDA இன் ஆதரவை வலுப்படுத்துவது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடியிருந்தார்.

தமது பங்காண்மையினூடாக நாட்டில் உணவு பாதுகாப்பை எவ்வாறு மேம்படுத்துவதில் பங்களிப்பு வழங்கக்கூடியதாக இருக்கும் என்பது தொடர்பில் உப செயலாளர் மற்றும் நியு அந்தனீஸ் நிர்வாகத்தைச் சேர்ந்தவர்கள் தமது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

U.S. Soybean Export Council (USSEC) இனால் வழங்கப்படும் 'Fed with Sustainable U.S. Soy' எனும் முத்திரையை பெற்றுக் கொண்ட முதலாவது சர்வதேச நிறுவனமாக நியு அந்தனீஸ் திகழ்கின்றது. அதனூடாக அமெரிக்காவிடமிருந்து நிலைபேறான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கான தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியுள்ளது. இதனைத் தொடர்ந்து மேலும் பல நிறுவனங்களும் இந்த வழிமுறையை பின்பற்ற ஆரம்பித்திருந்தன.

ஸ்தாபிக்கப்பட்டது முதல், விலங்கு நலன்புரி நடவடிக்கைகளில் அமெரிக்காவின் தேசிய கோழி இறைச்சி சம்மேளனத்தினால் (NCC) நிர்ணயிக்கப்பட்டுள்ள பண்ணை மற்றும் உற்பத்தி செயற்பாடுகளில் விஞ்ஞான ரீதியில் உறுதி செய்யப்பட்ட வழிமுறைகளை அந்தனீஸ் பின்பற்றுகின்றது. அண்மையில் சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட FSSC 22000 சான்றிதழையும் பெற்றுள்ளது.

தனது "பசுமை" எனும் இலச்சினைக்காக புகழ்பெற்றுள்ள நியு அந்தனீஸ் பார்ம்ஸ், சூழலுக்கு நட்பான செயன்முறைகளை பின்பற்றுவதுடன், தொடர்ச்சியாக தொழில்துறையில் புதிய நியமங்களை ஏற்படுத்தி வருகின்றது. உயிரியல் ரீதியில் உக்கக்கூடிய பொதியிடலை பின்பற்றும் இலங்கையின் ஒரே உற்பத்தியாளராகத் திகழ்வதுடன், ISO 14064-1:2018 நியமங்களின் பிரகாரம் கட்டுப்பாட்டு சம்மேளனத்திடமிருந்து பச்சைஇல்ல வாயு (GHG) உறுதிப்படுத்தல் அறிக்கையை பெற்றுள்ள ஒரே நிறுவனமாகவும் திகழ்கின்றது.

தமது கோழி இறைச்சி உற்பத்தி பெறுமதி சங்கிலித் தொடரில் விரிவாக்கத்தை மேற்கொள்வதில் குழுமம் கவனம் செலுத்துகின்றது. அதில், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், தனது சில்லறை விற்பனை பிரசன்னத்தை வலுப்படுத்தல், ஏற்றுமதி சந்தைகளை வளர்த்தல் போன்றன அடங்கியுள்ளதுடன், அவற்றை நிலைபேறாண்மைக்கு முக்கியத்துவமளித்து மேற்கொள்வதற்கு திட்டமிட்டுள்ளது. அதனூடாக, போஷாக்கான, பாதுகாப்பான மற்றும் பசுமையான கோழி இறைச்சியை தனது உண்மையான நுகர்வோர்களுக்கு பெற்றுக் கொடுக்க எதிர்பார்க்கின்றது.

# லுமாலா–ZeroPlastic முன்னெடுப்பின் புத்தாண்டு 2024 நிகழ்வு

ஸ்மார்ட் போக்குவரத்து மற்றும் சூழல் நட்பான சேவைகளையும், தீர்வுகளையும் வழங்கும் லுமாலா என அறியப்படும் சிட்டி சைக்கிள் இன்டர்ட்ரீஸ் மெனுபக்ஷரிங் (பிரைவட்) லிமிடெட், விகாரமகாதேவி பூங்காவில் அண்மையில் முன்னெடுத்திருந்த ZeroPlastic முன்னெடுப்பு புத்தாண்டு நிகழ்வின் பிரதான அனுசரணையாளராகத் திகழ்ந்தது.



இந்த நிகழ்வில் ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் பங்கேற்றிருந்ததுடன், இந்த ஆண்டின் தமிழ், சிங்கள புத்தாண்டை வரவேற்கும் வகையில், கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர். நிகழ்வின் விசேட அம்சமாக, ஒற்றைப் பாவனை பிளாஸ்ரிக் பொருட்கள் எதுவும் இந்த நிகழ்வின் போது பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. ஏனையவர்களுக்கு முன்மாதிரியான செயற்பாடாக இது அமைந்திருந்தது. சூழல் நிலைபேறாண்மைக்கான திரண்ட அர்ப்பணிப்புடன், இந்த நிகழ்வின்போது, பாரம்பரியம் மற்றும் சூழல்-அக்கறை ஆகியன இணைந்ததாக கொண்டாட்டங்கள் அமைந்திருந்தன. ஏனைய வைபவங்களுக்கும் முன்மாதிரியானதாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

பாரம்பரிய விளையாட்டுகள் முதல் கலாசார செயற்பாடுகள் வரை, புத்தாண்டு கொண்டாட்டங்களில் ஒவ்வொரு அம்சமும் நிலைபேறாண்மையை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தன. திரண்ட முயற்சிகளினூடாக, லுமாலா மற்றும் ZeroPlastic முன்னெடுப்பு இணைந்து, கொண்டாட்ட வைபவங்கள், புவிக்கு நட்பான வகையில் முன்னெடுக்கப்படக்கூடியதை வெளிப்படுத்தியிருந்தன.

பகிரப்பட்ட பொறுப்புக்கூரலுக்கான ஆதாரமாக பங்குபற்றுநர்களின் நேர்த்தியான மனநிலை அமைந்திருந்ததுடன், நிலைபேறான தீர்வுகளை பின்பற்றுவதற்கான முன்வருகையும் அமைந்திருந்தது.

ZeroPlastic முன்னெடுப்பு என்பது, இலங்கையின் மாபெரும் சூழல்சார் தன்னார்வ அமைப்பாக திகழ்வதுடன், விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளினூடாக நபர்களுக்கு வலுவூட்டுகின்றது. பல்கலைக்கழகங்கள், கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் போன்றவற்றிலிருந்து 10,000க்கும் அதிகமான தன்னார்வ செயற்பாட்டாளர்களைக் கொண்டுள்ளதுடன், கல்வியறிவூட்டல் மற்றும் விழிப்புணர்வூட்டல் செயற்பாடுகளினூடாக பிளாஸ்ரிக் மாசுகளுக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளது.

லுமாலா தனது சைக்கிள் தெரிவுகளையும், அண்மையில் அறிமுகம் செய்திருந்த Eco Hauler e-bikes களையும் இந்த நிகழ்வுகளில் ஈடுபடுத்தியிருந்தது. அதன் e-bikeகள், நிறுவனங்கள், அரச ஸ்தாபனங்கள் மற்றும் பல அமைப்புகள் மத்தியில் தற்போது அதிகளவு கேள்வியைக் கொண்டிருப்பதுடன், தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகளுக்கு அனுகூலங்களை வழங்கக்கூடிய சூழல்சார் செயற்பாடுகளை தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு, நேர்த்தியான சூழல் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய பல்வேறு கைகோர்ப்புகளை மேற்கொள்வது தொடர்பிலும் கவனம் செலுத்தப்படுகின்றது.

# தார்மீகனுடன் ஒரு நேர்காணல்...

நதாஷா ஸ்டீபன்,
ஊடகக்கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்



யாழ்ப்பாணத்தில் இறுதியாக OTP எனும் முழு நீளத் திரைப்படமானது மக்கள் மத்தியில் அதிகம் பேசப்பட்ட திரைப்படமாகக் காணப்படுகின்றது. குறிப்பாக அப்படத்தில் வெளிவந்த "சட்டப்படி வடிவு" என்ற பாடல் அனைவராலும் பகிரப்பட்டு பாராட்டைப் பெற்றது.

அப்பாடலின் வரிகளுக்கும் குரலுக்கும் சொந்தக்காரர் கணேசமூர்த்தி தார்மீகன். இசையின் மீதிருந்த காதலால் இசைத்துறைக்கு ஈர்க்கப்பட்டுக் கிட்டத்தட்ட 14 வருடங்கள் இத்துறையில் பயணித்துக் கொண்டிருக்கின்றார். இசைத்துறையின் மீதிருந்த அளவற்ற பற்றினால் இதுவரையிலும் 20க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். ஒரு பாடகராக மட்டுமின்றி பாடலாசிரியராகவும் வலம்வரும் இவருடனான நேர்காணலே இது.

**கேள்வி : உங்கள் இசை பின்னணி மற்றும் நீங்கள் பாடகராக இப் பயணத்தை எப்படி ஆரம்பித்தீர்கள்?**

**பதில் :** என்னுடைய இசைப்பயணமானது என்னுடைய நண்பன் ரெக்ஸி பிரின்ஸுடன் ஆரம்பமாகியது. எந்தவிதமான இசை பின்புலமும் இல்லாமல் தான் இப்பயணத்தை ஆரம்பித்தேன். பாடல்களைக் கேட்டு அதில் ஒரு ஆசை பிறந்து நாமும் செய்து பார்ப்போமென முன் வந்தேன் . ஆனால், அப்போது அதற்குரிய இசைக்கருவிகளோ எந்த வசதியுமோ அல்லது இசையைப் பற்றிய அறிவோ என்னிடம் காணப்படவில்லை. பின் எனது நண்பனோடு இணைந்து முதலாவது பாடலை உருவாக்கினேன்.

அந்தப் பாடல் அவ்வளவாக மக்களிடம் சென்றடையவில்லை. ஆனால் எனக்கு ஒரு திருப்தியாக இருந்தது. இவ்வாறு தான் நான் பாடகனாகவும் என் நண்பன் இசையமைப்பாளராகவும் இத்துறையில் அறிமுகமானோம்.

**கேள்வி: ஒரு பாடலை பாடும்போது அல்லது ஒரு பாடலை எழுதும்போது உங்களை தூண்டுவது எது?**

**பதில்:** ஒரு பாடலை பாடும்போது அல்லது அதனை எழுதும்போது தூண்டுகின்ற விடயமென்றால், ஒவ்வொரு பாடலையும் முடித்து விட்டு வரும்போது ஒவ்வொரு விடயத்தையும் கற்றுக் கொண்டு அடுத்தடுத்து வரும் பாடல்களை இன்னும் இன்னும் சிறப்பானதாகக் கொடுக்க வேண்டும் என்பதேயாகும். இதற்காகப் பலரினுடைய கருத்துக்களையும் கேட்டறிவேன்.

அவை நேர்மறையாக இருந்தாலும் எதிர்மறையாக இருந்தாலும் அதனைக் கேட்டறிந்து அடுத்தடுத்த விடயங்களை மேற்கொள்வேன். ஆரம்பத்தில் நான் பாடல்களை உருவாக்கும் போது அதனுடைய தரம் மிகக் குறைவாகத்தான் இருந்தது. இசை பற்றிய பின்புலம் சரியாக எனக்கு இல்லாததால் எதுவும் தெரியவில்லை. ஆனால், ஒரு விருப்பத்தோடு தான் நான் ஆரம்பித்தேன்.

இவ்வாறு ஆரம்பிக்கும் பட்சத்தில் அநேகமான நபர்கள் என்னை ஏளனம் செய்ததுண்டு. நான் கல்லூரியில் படிக்கும் போது மேடையில், என்னுடைய முதலாவது பாடலை பாடும் பொழுது "நீ மேடையை விட்டு வெளியேறு" என்றெல்லாம் ஏளனம் செய்தார்கள்.

அது எனக்கு மிகவும் வருத்தத்தைத் தந்தது. ஆனால், அதையே ஒரு ஊக்கப்படுத்தலாக எடுத்துக்கொண்டு என் பயணத்தை ஆரம்பித்தேன். அன்று என்னை ஏளனம் செய்தவர்கள் இன்று என்னுடைய பாடல்களைக் கேட்டுப் பாராட்டிச் செல்கின்றனர்.

**கேள்வி : உங்கள் இசைப் பாணி அல்லது இசை வகையை எப்படி விவரிப்பீர்கள்?**

**பதில் :** என்னை பொருத்தமட்டிலும் ஆரம்பத்தில் சொல்லிசைப் பாடல்களை மட்டுமே பாடிக்கொண்டிருந்தேன். இப்போது மெல்லிசை பாடல்கள் தான் அதிகமாகப் பாடிக் கொண்டிருக்கின்றேன். சொல்லிசை பாடல்களை விட மெல்லிசை பாடல்கள் எனக்குப் பிடித்திருப்பதாலும் அவை எனது குரலுக்குப் பொருத்தமாக அமைவதாலும் அதனையே தெரிவு செய்து அந்த துறையில் செல்கின்றேன்.

**கேள்வி : பாடகராக நீங்கள் என்ன சவல்களை எதிர்கொண்டீர்கள்? அவற்றை எவ்வாறு சமாளித்தீர்கள்?**

**பதில்:** ஆரம்பத்திலிருந்தே பல சவால்களை எதிர்நோக்கினேன். பாடல் உருவாக்கத்திற்கான இசைக்கருவிகள், ஒலிவாங்கிகள் மற்றும் ஒரு கணினி கூட இருக்கவில்லை.

என்னுடைய முதலாவது பாடலை உருவாக்கும் போது நான் தொலைபேசியில் தான் செயலிகளைத் தரவிறக்கம் செய்து என் நண்பனோடு இணைந்து அந்த பாடலை வெளியிட்டேன். ஒரு பாடல் உருவாக்கத்திற்கான போதுமான வளம் இல்லை எனும் போது அதுவே எனக்குப் பெரிய சவாலாக இருந்தது.

பணம் இல்லை என்றால் அதை யாரிடம் பெற்றுக் கொள்வது யாரிடம் அறிவுரை கேட்பதென அனைத்துமே கடினமாக இருந்தது. ஒருசில வேளைகளில் நானும் எனது நண்பனும் சாப்பிடாமல் இதைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருப்போம். அந்த கனவு அதை மெய்ப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் மட்டுமே என்னிடம் ஓடிக்கொண்டிருந்தது.

**கேள்வி : உங்களை குறிப்பாக பாதித்த அல்லது ஊக்கப்படுத்திய கலைஞர்கள் அல்லது இசைக்கலைஞர்கள் யாரேனும் இருக்கின்றார்களா?**

**பதில் :** ஆம், அது ஹிப் ஹாப் தமிழா ஆதி. ஏனென்றால் அவரும் ஒரு சுதந்திரமான சுயாதீனமான இசைக் கலைஞராக இருந்து தான் இப்போது திரைப்படங்களுக்கு இசையமைக்கும் இசையமைப்பாளராக, பாடகராக, நடிகராக திரைத்துறைக்கு வந்திருக்கின்றார். அவருடைய வாழ்க்கை எங்களுடைய வாழ்க்கையை ஒத்திருந்தது. அவர் நடித்து வெளிவந்த திரைப்படமான மீசையை முறுக்கு படம் பார்க்கும் போதெல்லாம் எனக்குப் புல்லரித்தது.



அந்த திரைப்படத்தில் வருவதுபோல அதே சூழ்நிலையில் பல சவால்களைச் சந்தித்து இந்த துறைக்கு அடியெடுத்து வைத்து நிறைய அனுபவங்களை பெற்றுக்கொண்டிருக்கின்றேன் என்பதில் எந்தவித மறுபாடும் இல்லை. அவரை ஒரு முன்மாதிரி என்று கூட எடுத்துக் கொள்ளலாம்.

**கேள்வி : நீங்கள் பாடல் பாடுவதை தாண்டி பாடலாசிரியராகவும் இருந்து வருகின்றீர்கள். பாடல்களை எழுதும் போது எவ்வாறான பாடல்களை எழுத ஆர்வப்படுகின்றீர்கள்?**

**பதில் :** பாடல்களைப் பாடும் போது, நான் எவ்வகையான பாடல்களையும் பாடுவேன் சொல்லிசை, மெல்லிசை, காதல் பாடல்கள், நட்பு பாடல்கள் மற்றும் சோகப் பாடல்கள் என எல்லா வகையான பாடல்களையும் என்னால் பாட முடியும் ஆனால் பாடல் வரிகள் எனும்போது காதல் பாடல்கள் தான் எனக்கு எழுதுவதற்கு இலகுவாக இருக்கும். குறித்த தளத்திலேயே எழுதக்கூடியதாகவும் இருக்கும்.

**கேள்வி : இத்துறையில் உங்களால் மறக்க முடியாத தருணங்கள் அல்லது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

**பதில் :** ஆரம்பத்தில் நான் ஆல்பம் பாடல்களையே செய்து கொண்டிருந்தேன். திடீரென ஒரு முழு நீளத் திரைப்படத்தில் பாடுவதற்கான ஒரு வாய்ப்பு கிடைத்தது. இலங்கையில் வெளியான மணல் படத்தில் ஒரு பாடல். மணல் திரைப்படத்திற்கு நான் முதலில் கலை இயக்குநராகவே சென்றிருந்தேன்.

பின்பு திரைப்படத்திலேயே நடிப்பதற்கான வாய்ப்பையும் பெற்று ஒரு பாடல் பாடுவதற்கான வாய்ப்பும் கிடைத்தது. இசையமைப்பாளர் பத்மயன் அவர்களுடைய இசையமைப்பில் தான் அந்த பாடல் வெளியாகியது. மேலும் சமீபத்தில் இலங்கையில் வெளிவந்த OTP திரைப்படத்தில் சட்டப்படி வடிவு என்ற பாடலை பிரசாத் அண்ணாவின் இசையில் பாடியிருந்தேன்.

இந்த இரண்டு பாடல்களுமே திரையரங்குகளில் வெளியாகும் போது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இந்த இரண்டு அனுபவங்களும் தான் என்னுடைய வாழ்க்கையில் மறக்க முடியாத தருணங்களாக இருக்கின்றன.

கேள்வி : உங்களுடைய அடுத்த கட்ட நகர்வு எவ்வாறு இருக்கின்றதெனப் பகிர்ந்து கொள்ள முடியுமா?

பதில் : அடுத்து இரண்டு பாடல்கள் வெளிவரக் காத்திருக்கின்றன. ரெக்ஸி பிரின்ஸ் மற்றும் பிரசாத் அண்ணா ஆகியோரின் இசையமைப்பில் அவை வெளிவரவிருக்கின்றன. அந்தப் பாடல்களுக்கான காட்சியமைப்பு வேலைகள் மாத்திரமே எஞ்சியிருக்கின்றன. விரைவில் அந்தப் பாடல்களும் வெளிவரும். (தொடரும்)

இந்தோனேசியா

# வெள்ளப்பெருக்கில் 15 பேர் பலி



இந்தோனேசியா, தெற்கே சுலாவெசி மாகாணத்தில் லுவு பகுதியில் பெய்த கடும் மழையில், பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதில் நில சரிவில் 15 பேர் வரை உயிரிழந்துள்ளதுடன், 2 பேர் காயமடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.


மேலும், 100 வீடுகள் வரை சேதமடைந்துள்ளதோடு, 42 பேர் வெள்ள நீரில் அடித்து செல்லப்பட்டுள்ளனர். 4 வீதிகளும், ஒரு பாலமும் சேதமடைந்துள்ளன.

அதேசமயம், வெள்ளம் மற்றும் மண்சரிவு பாதிப்புகளில் இருந்து தப்பிப்பதற்காக, 115 பேர் மீட்கப்பட்டு மசூதிகள் அல்லது அவர்களுடைய உறவினர்களின் வீடுகளில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அந்நாட்டின் பேரிடர் மேலாண் கழகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், சில பகுதிகளில் காடுகள் அழிப்பு மற்றும் நீண்டநேரம் மழைப்பொழிவு போன்றவற்றால் நிலைமை மோசமடைந்துள்ளது. இதனால் 1,300க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## தாதிக்கு 760 ஆண்டுகள் சிறை



அமெரிக்காவில் பென்சில்வேனியாவில் ஹீதர் பிரஸ்டீ (வயது 41) என்ற தாதி பணியாற்றி வருகிறார். கடந்த ஆண்டு மே மாதம், 2 பேரைக் கொலை செய்ததாக இவர் மீது குற்றம்சாட்டப்பட்டது. அந்த வழக்கை விசாரித்ததில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளியானது.

இதுவரை இவர் பணியாற்றிய 5 சுகாதார மையங்களில், 17 பேரைக் கொலை செய்ததாகத் தெரியவந்துள்ளது. இது குறித்து விசாரணை செய்த போது, அவர் கண்காணிப்பில் இருக்கும் நோயாளிகளிடம் 'கடவுள்' போல இருக்க முயன்றதாகவும், அதனால் அவர் நோயாளிகளைக் கொலை செய்ததாகவும் கூறப்படுகிறது.

இரவு நேரத்தில் பணி செய்யும்போது, அங்கிருக்கும் நோயாளிகளுக்கு அதிக அளவு கொடிய இன்சுலின்களை கொடுத்துள்ளார். இதனால் அந்த நோயாளிகள் வரிசையாக உயிரிழந்துள்ளனர்.

மேலும் நோயாளிகளிடம் அவர் கடினமாக நடந்துகொண்டார் எனவும் அவருடன் பணியாற்றிய சக தாதியர்கள் தெரிவித்தனர். அதுமட்டுமின்றி, தன்னுடன் இருப்பவர்களை அவர் வெறுப்பதாகவும், அவர்களைக் காயப்படுத்தப் போவதாகவும் தனது தாயாருக்கு அவர் தொடர்ந்து தகவல் அனுப்பியுள்ளார்.

"அவர் உடல்நலம் சரியில்லாதவர் அல்ல. மனநோயாளியும் அல்ல.. என் தந்தையைக் கொன்ற அன்று அவரின் முகத்தில் சாத்தானைப் பார்த்தேன்" என நீதிமன்றத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த வழக்கில் அவரே தன்னுடைய குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

மேலும்,அவரின் கொடூர குற்றத்திற்காக 380-760 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து உத்தரவிட்டுள்ளது.

நாசா

சைக் விண்கலம்

## இலக்கை விட பல மடங்கு சாதனை

நாசாவின் சைக் விண்கலம், தனது இலக்கை விட 25 மடங்கு அதிக தரவுகளைப் பரிமாறி சாதனை படைத்துள்ளது என நாசா பெருமிதம் தெரிவித்துள்ளது.

நாசா கடந்த ஆண்டு சைக் 16 (Psyche 16) என்ற விண்கல்லை ஆராய்வதற்கு விண்ணில் அனுப்பிய விண்கலம்தான் சைக் (Psyche).

பொதுவாக விண்கலத்தை விண்வெளிக்கு அனுப்பும் பொழுது அதில் அனுப்புதல், பெறுதல் என்ற இரு அமைப்புகள் பொருத்தப்பட்டு இருக்கும். இதில் பூமிக்கும் விண்கலத்திற்கும் இடையில் அனுப்பப்படும் தகவல்கள் அனைத்தும் ரேடியோ அலைவரிசை மூலம் அனுப்பப்பட்டு வருகிறது. இதனால் விண்கலம் அனுப்பும் தரவுகள் பூமியை வந்தடையக் கால தாமதம் ஆகலாம்.

இதற்கு பதிலாக விஞ்ஞானிகள் லேசரை பயன்படுத்த நினைத்தனர். லேசர் மூலம் அனுப்பப்படும் தரவுகள் உடனடியாகவும், அதிகமாகவும் அனுப்பமுடியும் என்பதால், இதை அடிப்படியாகக் கொண்டு நாசா சைக் விண்கலத்தில் லேசர் அமைப்பையும் கையாண்டனர்.

இதுவரை சைக் விண்கலமானது ரேடியோ அலைவரிசையில் நிறைய தரவுகளை கொடுத்து வந்தாலும்இ லேசர் ஒளிகற்றையானது வேலை செய்கிறதா என்பதை சோதனை செய்து பார்க்கவே கடந்த சில நாட்களுக்கு முன் நாசா லேசர் அமைப்பை ஒத்திகைப் பார்த்தது.

அப்போது 14 கோடி மைலுக்கு அப்பால் பயணித்துக் கொண்டிருக்கும் சைக் விண்கலத்திலிருந்து பூமிக்கு லேசர் சிக்னல் வந்த நிலையில், சைக் விண்கலம் தனது இலக்கை விட 25 மடங்கு அதிக தரவுகளை பரிமாறி சாதனை படைத்துள்ளது என நாசா தெரிவித்துள்ளது.

இந்த லேசர் சிக்னலை, ஒரு விண்கலத்திலிருந்து மற்றொரு விண்கலத்தை தொடர்புக்கொள்ளவும் பயன்படுத்தபடலாம் என்கின்றனர் அறிவியல் ஆய்வாளர்கள்.

குஜராத்

மனைவியின் தகாத உறவால்

## கணவருடன் மகளும் பலி



குஜராத்தில், மனைவியின் தகாத உறவால், கணவரோடு மகளின் உயிரும் பறிபோன சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் மாநிலம், சபர்கந்தா மாவட்டம் வேதா கிராமத்தைச் சேர்ந்தவர் 33 வயதான ஜிதேந்திரா வன்சாரா. இவருக்கு திருமணமாகி இரண்டு குழந்தைகள் உள்ளனர்.

சம்பவ தினத்தன்று, ஜிதேந்திராவின் வீட்டிற்கு பொதி ஒன்று வந்துள்ளது. அடையாளம் தெரியாத நபர் ஒருவரால் வழங்கப்பட்ட அந்த பொதியை, ஜிதேந்திரா திறந்து பார்த்தபோது, அவரின் அருகில் அவரின் இரண்டு குழந்தைகளும், உறவுக்கார குழந்தை ஒருவரும் இருந்துள்ளனர்.

அந்த பொதியில், மின்சார பொருள் ஒன்று இருக்கவே, அதற்கு இணைப்பு கொடுத்தபோது, அது வெடித்து சிதறியுள்ளது. இதனால், அங்கிருந்த ஜிதேந்திரா மற்றும் மூன்று குழந்தைகளும் பலத்த காயம் அடைந்தனர்.

இதில், ஜிதேந்திரா சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார். பின்னர் படுகாயமடைந்த குழந்தைகள், வடலி அருகே உள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தனர்.

இந்நிலையில், ஜிதேந்திராவின் 14 வயது மகள் பூமிகா சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மீதமுள்ள குழந்தைகளில் ஒருவர் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பெற்று வருகிறார்.

இதேசமயம், மனைவியுடன் தகாத உறவில் இருந்த ஜெயந்தி வன்சாரா என்பவர்தான், இந்த பொதியை அனுப்பி வைத்துள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ள நிலையில், அவர் மீது வழக்குப்பதிவு செய்த பொலிஸார், இது பற்றிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

திருப்பத்தூர்

குழந்தை தகராறில்

## கணவர் விபரீத முடிவு



வாணியம்பாடி அருகே கணவன், மனைவி இடையே ஏற்பட்ட குடும்ப தகராறில் கணவன் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி அடுத்த வளையாம்பட்டு பகுதியை சேர்ந்தவர் சங்கர் (35). இவருக்கு திருமணமாகி 12 ஆண்டுகள் ஆன நிலையில், குழந்தை இல்லையென கூறப்படுகிறது.

இதனால் சங்கர் மற்றும் அவரது மனைவியிடையே அடிக்கடி குடும்பத்தகராறு ஏற்பட்டு வந்துள்ளது. சமீபத்தில் சங்கரின் மனைவி அவருடன் சண்டையிட்டு தன் தாய் வீட்டிற்கு சென்றுள்ளார்.

இதனால் மனவிரக்தியில் இருந்த சங்கர் அவரது சொந்த கிராமமான வளையாம்பட்டு பகுதியில் இரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்துக்கொண்டுள்ளார்.

ஸ்பானிய லா லிகாத் தொடர்

# சம்பியனான றியல் மட்ரிட்



ஸ்பானிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான லா லிகாத் தொடரில் றியல் மட்ரிட் சம்பியனானது.

ஜிரோனாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் பார்சிலோனா தோல்வியடைந்தமையைத் தொடர்ந்தே றியல் மட்ரிட் சம்பியனானது.

இன்னும் நான்கு போட்டிகள் இருக்கையில் மட்ரிட் 87 புள்ளிகளைப் பெற்றுள்ள நிலையில், தற்போது இரண்டாம் இடத்திலுள்ள ஜிரோனா 74 புள்ளிகளைப் பெற்றுள்ளது. அந்தவகையில் ஜிரோனா நான்கு போட்டிகளில் வென்றாலும் 86 புள்ளிகளையே அடைய முடியுமென்ற நிலையிலேயே மட்ரிட் தற்போதே சம்பியனாகியுள்ளது.



## ஐ.பி.எல்: குஜராத்தை வென்ற பெங்களூரு

இந்தியன் பிறீமியர் லீக்கில் (ஐ.பி.எல்), பெங்களூருவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குஜராத் டைட்டான்ஸுடனான போட்டியில் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூருவின் அணித்தலைவர் பப் டு பிளெஸி, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் ஆரம்பத்திலேயே ரித்திமான் சஹா, அணித்தலைவர் ஷுப்மன் கில், சாய் சுதர்ஷனை மொஹமட் சிராஜ் (2), கமரன் கிறீனிடம் பறிகொடுத்தது. அந்தைத் தொடர்ந்து ஷாருக் கானும், டேவிட் மில்லரும் ஓட்டங்களைச் சேகரித்த நிலையில், மில்லர் 30 (20), ஷாருக் கான் 37 (24) ஓட்டங்களுடன் கரண் ஷர்மா, ரண் அவுட் முறேஜயில் வீழ்ந்தனர்.

இதன் பின்னர் ராகுல் டெவாட்டியாவும், ரஷீட் கானும் ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் 18 (14), 35 (21) ஓட்டங்களுடன் ரஷீட் கானும், டெவாட்டியாவும் யஷ் தயாலிடம் வீழ்ந்தனர். சுதர்ஷனுக்குப் பதிலாக தாக்கம் செலுத்தும் மாற்றுவீரராகக் களமிறங்கிய விஜய் ஷங்கர் 10 (07) ஓட்டங்களுடன் இறுதி ஓவரின் விஜயகுமார் வியாஸ்கின் இரண்டு விக்கெட்டுகளில் ஒன்றாக விழ 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 147 ஓட்டங்களை குஜராத் பெற்றது.

பதிலுக்கு 148 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பெங்களூரு, டு பிளெஸியின் 64 (23), விராட் கோலியின் 42 (27) ஓட்டங்கள் மூலம் அதிரடியான ஆரம்பத்தைப் பெற்றபோதும் ஜொஷ் லிட்டில் (4), நூர் அஹ்மட்டிடம் (2) வரிசையாக விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது.

எனினும் தினேஷ் கார்த்திக்கின் ஆட்டமிழக்காத 21 (12), ஸ்வப்னில் சிங்கின் ஆட்டமிழக்காத 15 (09) ஓட்டங்களோடு 13.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக சிராஜ் தெரிவானார்.

இந்நிலையில் மும்பையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை மும்பை இந்தியன்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

இத்தாலிய சீரி ஏ தொடர்


## சஸூலோவிடம் தோற்ற சம்பியன்கள்



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், சஸூலோவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் சம்பியன்களாகக் தெரிவாகியுள்ள இன்டர் மிலன் தோற்றது.

இதேவேளை மொன்ஸாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் லேஸியோ சமப்படுத்தியது.

## மியூனிச்சின் முகாமையாளராக டென் ஹக்?



ஜேர்மனிய புண்டெஸ்லிகா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முகாமையாளராக வருவதற்கு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் முகாமையாளர் எரிக் டென் ஹக்குக்கு வாய்ப்புகள் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடப்புப் பருவகால முடிவில் மியூனிச்சின் முகாமையாளர் தோமஸ் துஷெல் விலகுகின்ற நிலையில், மியூனிச்சின் முதற் தெரிவான இன்னொரு புண்டெஸ்லிகா கழகமான பயேர் லெவர்குசனின் பயிற்சியாளர் ஸ்கெபி அலோன்ஸோ லெவர்குசனிலேயே தொடரத் தீர்மானித்ததுடன், இரண்டாம் தெரிவான ஒஸ்திரியாவின் பயிற்சியாளர் ரஃல்ப் ரங்க்னிக்கும் அவ்வணியிலேயே தொடரத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



ஜேர்மனிய புண்டெலிஸ்கா தொடர்

## ஸ்டட்கார்ட்டிடம் தோற்ற மியூனிச்

ஜேர்மனியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெஸ்லிகா தொடரில், வி.எஃப்.பி. ஸ்டட்கார்ட்டின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் பயேர்ண் மியூனிச் தோற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 06, மே 2024, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.